Source: *Tamil Murasu*, Front Page
Date: 19 August 2016

அதிபர், பிரதமர் பதவி தொடர்பாக சிங்கப்பூரரிடையே கருத்தெடுப்பு

இனவாரியாக விருப்பம்

பெரும்பாலான சிங்கப்பூரர்கள் நாட்டின் பிரதமராக அல்லது அதிபராக தங்கள் இனத்தைச் சேர்ந்த ஒருவர் பதவி ஏற்பதையே விரும்புகிறார்கள்.

சிங்கப்பூரின் நான்கு முக்கிய இனங்களுக்கிடையே நிலவும் உறவுகள் பற்றி சிங்கப்பூரர்களின் கருத்தைப் பெறுவதற்காக நாடளாவிய ஆய்வு ஒன்றை 'சேனல் நியூஸ் ஏஷியா'வும் கொள்கை ஆய்வுக் கழகமும் இணைந்து நடத்தின.

இவ்வாண்டு ஜூன், ஜூலை மாதங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட ஆய்வில் 2,000 குடிமக்களும் நிரந்தரவாசிகளும் கலந்துகொண்டு தங்களது கருத்துகளைத் தெரிவித்தனர்.

சிறுபான்மை பிரதிநிதித்துவம் போதிய அளவுக்கு இருப்பதை உறுதிப்படுத்த மலாய், இந்தியரிடையே விகிதாசாரத்துக்கும் அதிகமானோர் ஆய்வில் உட்படுத்தப்பட்டனர்.

பெரும்பான்மையினரான சீன மக்களிடையே பார்க்கையில், சிங்கப்பூரரான சீனர் ஒருவர் பிரதமர் ஆவதை தாங்கள் ஏற்றுக் கொள்வதாக 98% கூறினர்.

அதிபராக சிங்கப்பூரரான சீனர் பதவியேற்பதை விரும்புவதாக 96% சீனர்கள் கூறினர்.

மலாய்க்காரர் ஒருவர் பிரதமர் ஆவதை தாங்கள் விரும்புவதாகக் கூறிய மலாய் மக்களின் விகிதம் 93%.

அதிபர் பதவியைப் பொறுத்த வரை இந்த விகிதம் 94%ஆக இருந்தது.

அதேபோல இந்தியர் ஒருவரைத் தங்கள் பிரதமராக ஏற்றுக்கொள்ள விரும்புவதாகக் 89% இந்தியர்கள் கூறினர். அதிபர் பதவியைப் பொறுத்த வரையில் இந்த விகிதம் 92% ஆக இருந்தது.

ஆய்வு முடிவு	பிரதமர் பதவிக்கான இனத்தவர்		
	சீனர்	மலாய்க்காரர்	இந்தியர்
சீனர்கள் விருப்பம்	98%	53%	60%
மலாய்க்காரர்கள் விருப்பம்	86%	93%	75%
இந்தியர்கள் விருப்பம்	88%	70%	89%
மற்றவர் விருப்பம்	87%	81%	68%

தகவல்: கொள்கை ஆய்வுக் கழகம்

ஒட்டுமொத்தத்தில் எல்லா இனங்களையும் சேர்ந்த பெரும்பாலான மக்கள் பிரதமர், அதிபர் ஆகிய பதவிகளில் சிங்கப்பூரரான சீனர் ஒருவர் அமர்வதை விரும்புகிறார்கள்.

80 விழுக்காட்டுக்கும் அதிகமான மலாய், இந்திய, இதர இனத்தோரின் விருப்பம் இவ்வாறாக இருந்தது.

பிரதமர், அதிபர் பதவிகளில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் அமர்வதை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தோரின் விகிதம் குறைவாக இருந்தது.

இது சீனர்களிடம் 60 விழுக்காடாகவும் மலாய்க்காரர்களிடம் 75 விழுக்காடாகவும் இருந்தது.

சிங்கப்பூரின் பிரதமராக, அதிபராக சிங்கப்பூரரான இந்தியர் ஒருவர் பதவியேற்பதை தாங்கள் ஏற்றுக்கொள்வதாக மற்ற இனத்தவர்களில் ஏறக்குறைய 68 விழுக்காட்டினர் கூறினர்.

மலாய்க்காரர் ஒருவர் சிங்கப்பூரின் பிரதமர் அல்லது அதிபராக பதவியேற்பதைப் பொறுத்த வரையில் 50%க்கும் அதிகமான சீனர்கள், ஏறக்குறைய 70% இந்தியர்கள், 80% மற்றவர்கள் என்கிற அளவில் விருப்பம் காணப்பட்டதாக ஆய்வு சுட்டியது.

ஒருவருக்கு வயது ஆகஆக அவர் நாட்டின் பிரதான பதவிகளில் வேறுபட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவர் அமர்வதைக் காணவிரும்புவது குறைகிறது.

முப்பது வயதுக்கும் குறைந்த சீனர்களைப் பொறுத்தவரையில், அவர்களில் 60%க்கும் அதிகமானவர்கள் சிங்கப்பூரின் பிரதமராக அல்லது அதிபராக சிங்கப்பூரரான மலாய்க்காரர் ஒருவர் பதவியேற்பதை ஏற்றுக்கொள்கிறார்கள்.

இந்தப் பதவிகளில் சிங்கப்பூரரான இந்தியர் ஒருவர் அமர்வதைக் காண விரும்புவோரின் அளவு அவர்களில் 70%க்கும் அதிகமாக இருக்கிறது.

அதேவேளை, 60 வயதுக்கும் அதிகமானோர் கருத்துத் தெரிவிக்கையில் உயர் பதவிகளில் சிங்கப்பூரரான மலாய்க்காரர் ஒருவர் அமர்வதைக் காண விரும்புவோரின் அளவு சுமார் 40% முதல் 42% வரைதான் இருக்கிறது.

பிரதமர், அதிபர் பதவியில் சிங்கப்பூரரான இந்தியர் ஒருவர் அமர்வதைக் காண இந்த வயதுப் பிரிவினரில் 45%க்கும் 50% இடைப்பட்ட அளவிலான மக்கள் விரும்புகிறார்கள் என்பது ஆய்வின் மூலம் தெரிய வந்திருக்கிறது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.